# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2024

## வளர்தமிழ் 3

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 90 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

எ - கா

34 ஆண்டுகள் வன்னியை ஆட்சி செய்த மன்னன் கயிலைவன்னியன் .

( பண்டாரவன்னியன், கயிலைவன்னியன், சங்கிலியன் )

1. இசையோடு பாடி ஆடி நடிப்பதைக் ____________ என்பர்.

   ( வில்லுப்பாட்டு, கோலாட்டம், கூத்து )

2. ____________ புளிப்புச் சுவையுடையது.

   ( மாங்காய், கரும்பு, பாகற்காய் )

3. தங்கை பள்ளிக்கு ____________ என்று நடந்து சென்றாள்.

   ( விறுவிறு, மடமட, சலசல )

4. சிங்கத்தின் தோட்டத்தில் சிக்கியது ____________ .

   ( காகம், பந்து, பட்டம் )

5. வில்லவராய முதலியார் வாழ்ந்த ஊர் ____________ .

   ( நல்லூர், வேலூர், தகடூர் )

6. பலா + சுளை = ____________

   ( பலாசுளை, பலாச்சுளை, பலாற்சுளை )

7. புகழ் என்ற சொல்லின் எதிர்ச் சொல் ________________ .

( பகல், இருள், இகழ் )

8. நாம் தரைவழியாகச் செல்வதற்கு ________________ உதவுகிறது.

( பேருந்து, நீருந்து, விண்ணுந்து )

9. பயனை எதிர்பாராது செய்த உதவி ________________ விடப் பெரியது.

( மலையை, கடலை, குளத்தை )

10. பாக்குநீரிணையை நீந்திக் கடந்தவர் ________________ .

( எடிசன், ஆழிக்குமரன், ஆபிரகாம்லிங்கன் )

11. நாயைக் கண்ட பூனை மியாமியா என்று ________________ .

( கத்தியது, குரைத்தது, ஊளையிட்டது )

12. வானொலியைக் கண்டு பிடித்தவர் ________________ .

( கலிலியோ, மார்க்கோனி, கிரகாம்பெல் )

13. 12 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ________________ .

( பன்னிரண்டு, பண்ணிரண்டு, பன்னிரெண்டு )

14. **பழமொழி:**

________________ சேர்ந்த நாரும் மணக்கும்.

( பூவுடன், இலையுடன், காயுடன் )

15. நான் நாளை பாட்டுப் ________________ .

( பாடுகின்றேன், பாடினேன், பாடுவேன் )

16. பண்டாரவன்னியனின் நடுகல் நாட்டப்பட்ட இடம் ________________ .

( வவுனியா, சுன்னாகம், கற்சிலைமடு )

17. ________________ கவிதை வாசித்தாள்.

( அவள், அவன், நான் )

18. நீ தாயகத்தில் இருந்து ________________ வந்தாய்?

( என்ன, எத்தனை, எப்போது )

19. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல் ________________ .

( கணவாய், பன்றி, மீன் )

20. மாடு புல் மேய்ந்தது. மாடுகள் புல் ________________ .

( மேய்ந்தன, மேய்கின்றது, மேய்ந்தது )

புள்ளிகள் 20

**2) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமாக மாற்றி, எழுதுக.**

**எ - கா**

தங்கை நண்பிக்கு அஞ்சல் அனுப்பினாள். ( நண்பி )

1. புறா ____________________ சிக்கியது. ( வலை )

2. மாணவர் ____________________ எடுத்தனர். ( நூல் )

3. அம்மா ____________________ உணவு கொடுத்தார். ( தம்பி )

4. மின்குமிழ் ____________________ த் தரும். ( ஒளி )

5. நாங்கள் ____________________ நன்றி கூறுவோம். ( கதிரவன் )

புள்ளிகள் 10

## 3) கீறிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை எழுதுக.

எ - கா

யானை ____பளுவான____ பொருட்களைத் தூக்க உதவுகிறது.

( ~~பளுவான~~, பலுவான )

1. முற்றத்தில் ____________________ நிற்கின்றது.

( மரம், மறம் )

2. காகம் மரத்திலிருந்து "கா கா" என்று ____________________ .

( கறைந்தது, கரைந்தது )

3. பூக்கள் மிகவும் ____________________ இருக்கும்.

( அழகாக, அலகாக )

4. வானத்தில் பட்டம் ____________________ .

( பரக்கின்றது, பறக்கின்றது )

5. வாழை மரத்திற்கு ____________________ இல்லை.

( கிலைகள், கிளைகள் )

புள்ளிகள் 05

## 4) சொற்களைப் பொருத்தமாக இணைக்குக.

ஏ - கா

| | | |
|---|---|---|
| பாட்டி | பழம் | இருக்கிறார். |
| மீன்கள் | மானைத் | வாழும். |
| ஆசிரியர் | இருக்கையில் | கொத்துகின்றது. |
| கிளி | மாலை | கற்பித்தார். |
| சிறுமி | கடலில் | கட்டினாள். |
| புலி | பாடம் | துரத்தியது. |

புள்ளிகள் 10

**5) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| அவர்கள் | நீங்கள் | அவை |
| அது | ~~அவர்~~ | அவள் |

எ - கா

ஔவையார் ஒரு பெண் புலவர் அவர் பல பாடல்களை எழுதினார்.

1. நண்டுகள் நீரில் வாழ்கின்றன. ________ உணவுக்குப் பயன்படுகின்றன.

2. வாணி ஓவியம் வரைந்தாள். ________ போட்டியில் பரிசு பெற்றாள்.

3. நாய் வீட்டு விலங்கு. ________ வீட்டைக் காக்கும்.

4. ஆசிரியர் வகுப்புக்கு வரவில்லை. அதனால் ________ பாடத்தைப் படியுங்கள்!

5. நண்பர்கள் விலங்ககம் சென்றனர். ________ விலங்குகளைப் பார்த்து மகிழ்ந்தனர்.

புள்ளிகள் 10

## 6) ஒரு சொல்லில் விடை எழுதுக.

(எ - கா)

இலங்கை இறுதியாக யாரால் கைப்பற்றப்பட்டது?

ஆங்கிலேயரால்

1. நாலடியாரில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?

______________________________

2. ஈழத்தில் கூத்துகள் நடைபெறும் இடங்களில் ஒன்றைத் தருக.

______________________________

3. ஆழிக்குமரன் ஆனந்தன் பிறந்த ஊர் எது?

______________________________

4. பிரான்சு நாட்டின் தலைநகரம் எது?

______________________________

5. தமிழருடைய வீரத்தைப் பற்றிக் கூறும் நூல் எது?

______________________________

புள்ளிகள் 10

## 7) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

நேற்று தமிழ்ப்பள்ளியில் ஆண்டுவிழா நடைபெற்றது. ஆண்டுவிழாவில் பேச்சு, நடனம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மூன்றாம் வகுப்பு மாணவர்கள் நாடகம் நடித்தனர். பாரதி வீணை வாசித்தாள். ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் 'தமிழே உயிரே' என்ற பாடலுக்கு நடனம் ஆடினர். அகரன் தமிழைப் பற்றிப் பேசினான். எல்லா நிகழ்ச்சிகளும் சிறப்பாக இருந்தன என அகரனின் அப்பா கூறினார்.

எ - கா

எங்கே ஆண்டுவிழா நடைபெற்றது?

தமிழ்ப்பள்ளியில் ஆண்டுவிழா நடைபெற்றது______________.

1. ஆண்டுவிழாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் எவை?

_______________________________________________.

2. எத்தனையாம் வகுப்பு மாணவர்கள் நாடகம் நடித்தனர்?

_______________________________________________.

3. யார் வீணை வாசித்தாள்?

_______________________________________________.

4. ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் எந்தப் பாடலுக்கு நடனம் ஆடினர்?

_______________________________________________

_______________________________________________.

5. அகரன் எதைப் பற்றிப் பேசினான்?

_______________________________________________.

புள்ளிகள் 10

**8) பொருத்தமான முடிக்கும் சொல்லை எழுதுக.**

(எ - கா)

குயில் இனிமையாகக் கூவுகின்றது .

1. பனைமரம் மிகவும் உயரமாக ________________.

2. மாமி நேற்று பழங்கள் ________________ .

3. தம்பி மெல்லமெல்லப் படிகளில் ________________ .

4. சிறுவர்கள் சறுக்கியில் ________________ .

5. தேனீ பூக்களில் தேனைக் ________________ .

புள்ளிகள்10

## 9) படத்தைப் பார்த்து ஐந்து சொல்லியங்கள் எழுதுக.



1. ______________________________________________

______________________________________________

2. ______________________________________________

______________________________________________

3. ______________________________________________

______________________________________________

4. ______________________________________________

______________________________________________

5. ______________________________________________

______________________________________________

புள்ளிகள் 15